**HMOP NO. 85 /2019**
**Date 05.03.2026**
**எ.ம.சா.1 சுப்புலட்சுமி**
**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும், எனது கணவரும் காதல் திருமணம் செய்துகொண்டோம் என்றால் சரிதான். எங்களது காதல் திருமணத்திற்கு எனது கணவர் வீட்டில் முதலில் சம்மதம் இல்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னர் எனது கணவர் என்னுடன் தான் எனது தாயார் வீட்டில் இருந்தார் என்றால் சரிதான். திருமணத்தின்போது எனக்கு அப்பா மற்றும் உடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை என்றால் சரிதான். திருமண சமயத்தில் எங்கள் குடும்பத்திற்கு சொந்தமாக நிலம் ஏதும் இருந்ததா என்றால் இல்லை. திருமண சமயத்தில் நான் எந்த வேலைக்கும் சென்று சம்பாதிக்கவில்லை என்றால் பீடி சுற்றினேன். பீடி சுற்றுவதால் எனக்கு மாதம் ரூ. 3000/- வருமானம் கிடைக்கும். 2004 முதல் 2007 வரை எனது கணவர் கேரளாவில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். கேரளாவில் வேலை பார்க்கும்போது எத்தனை நாட்களுக்கு ஒரு முறை வருவார் என்றால் திருமணம் முடிந்து சில நாட்கள் கழித்து நாங்கள் இருவரும் கேரளாவிற்கு சென்று விட்டோம். கேரளாவில் எவ்வளவு நாட்கள் சேர்ந்து இருந்தீர்கள் என்றால் நான் கருவுற்ற 3 மாதத்திற்கு பின்னால் எனது தாயார் வீட்டுக்கு வந்துவிட்டேன். அதன் பின்னிட்டு எனக்கு குழந்தை பிறந்த பின்னர் நான் கேரளாவில் சென்று எனது கணவருடன் வாழ்ந்து வந்தேன். எனது கணவர் வெளிநாடு செல்லும் வரை நான் எனது கணவருடன் கேரளாவில் இருந்து வந்தேன். 2007 –2011 வரை எனது கணவர் மலேசியாவில் சென்று வேலை பார்த்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் எனது தாயார் வீட்டில் தான் இருந்து வந்தேன் என்றால் சரிதான். மலேசியாவில் எனது கணவர் என்ன வேலை பார்த்தார் எவ்வளவு சம்பளம் வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியும். மேற்படி விவரங்கள் அனைத்தும் எனது கணவர் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். தற்சமயம் நானும், எனது கணவரும் பிரிந்து தான் வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். எந்த ஆண்டில் இருந்து நானும்,எனது கணவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் 2015 முதல்

நாங்கள் பிரிந்து வாழ்ந்து வருகிறோம். 2012ம் வருடத்தில் எனது கணவர் எனது பெயரில் சொத்து எதுவும் வாங்கி கொடுத்தாரா என்றால் இல்லை. எனது கணவர் பெயர் எனது தாயார் குடும்பத்துடன் குடும்ப அட்டையில் உள்ளது என்றால் சரிதான். வெளிநாட்டில் இருந்தபோது எனது கணவர் எனக்கு பணம் போஸ்டு ஆபீஸ் மூலம் அனுப்புவார். வெளிநாட்டில் இருந்தபோது எனது கணவர் எனக்கு அனுப்பிய பணம் குறித்தான விவரங்கள் அனைத்தும் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். எனது கணவர் வெளிநாட்டில் இருந்து வந்த பின்னர் என்னிடம் அவர் அனுப்பிய பணத்தைக் குறித்து கணக்கு கேட்டார் நான் கணக்கு சொன்னேன். மேற்படி நான் சொன்ன கணக்கு எனது கணவருக்கு திருப்தியாக இல்லை என்றால் சரியல்ல. எனது கணவர் வெளிநாட்டில் இருந்தபோது மாதம், மாதம் தோராயமாக எவ்வளவு அனுப்பினார் என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது, அவரது பெற்றோர்களுக்கு கொடுக்க சொல்லி பணம் அனுப்புவார் சில மாதங்கள் ரூ. 1500/–, ரூ. 2000/– மற்றும் சில மாதங்கள் ரூ. 8000/–ம் வரை அனுப்பியுள்ளார். 2011ம் ஆண்டில் எனது கணவர் வெளிநாட்டில் இருந்து திரும்பி வந்த பின்னர் கேரளாவில் வேலை பார்த்து வந்தார். கேரளாவில் வேலை பார்க்கும் போது அவர் வெளிநாட்டில் சம்பாதித்த அளவிற்கு அவரால் சம்பாதிக்க இயலவில்லை என்றால் சரிதான். மேற்படி கேரளாவில் அவர் வேலை பார்க்கும் போது அவரது வருமானம் போதுமான அளவிற்கு இல்லாததால் எனக்கும், எனது கணவருக்கும் இடையில் பிரச்சனை ஏற்பட்டது என்றால் பணத்தால் பிரச்சனை ஏற்பட்டதில்லை. கேரளாவில் வேலை பார்க்கும்போது எனது கணவர் எவ்வளவு சம்பளம் வாங்கினார் என்றால் எனது கணவர் கூலி வேலை பார்த்தார் அவரது மொத்த சம்பளம் குறித்து என்னிடம் சொன்னது இல்லை எனக்கும், எனது மகனுக்கும் செலவுக்கு பணம் கொடுப்பார். நான் எனக்கு தெரிந்த நபர்களுக்கு வட்டிக்கு பணம் கொடுத்து தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல நான் பவ்டா குழு வைத்து நடத்தி வருவதால் குழு தலைவி என்ற முறையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மனுதாரர் வெளிநாட்டில் இருந்த போது எனக்கு அனுப்பிய பணத்தை நான்

ஊதாரிதனமாக செலவழித்தும், வட்டிக் கொடுத்தும் வந்தேன் என்றால் சரியல்ல. கேரளாவில் சம்பாதித்த பணம் போதுமானதாக இல்லாத காரணத்தால் நான் எனது கணவரை 2014 ல் எனது வீட்டில் இருந்து துரத்தி விட்டேன் என்றால் சரியல்ல. எனது கணவர் எங்களுக்கு திருமணம் ஆன காலமுதல் எனக்காவும், எனது குடும்பத்திற்காகவும் உழைத்து வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல. 2014 ம் ஆண்டு எனது கணவர் ஆலங்குளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தன்னை தனது மனைவியுடன் சேர்த்து வைக்கக் கோரி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி புகாரின் மீதான விசாரணையில் நான் எனது கணவரை சேர்த்துக்கொள்ள மறுத்து விட்டேன் என்றால் சரியல்ல. 2015 ம் ஆண்டில் இருந்து நாங்கள் பிரிந்து வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். நாங்கள் பிரிந்து வாழ்ந்த காலமுதல் இந்த வழக்கு தாக்கல் செய்யும் காலம் வரை நாங்கள் சேர்ந்து வாழ எந்த சட்டபூர்வமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பதில் உரையில் நான் எனது கணவருடன் சேர்ந்து வாழ தயாராக இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தற்போது எனது கணவருடன் சேர்ந்து வாழ தயாராக இல்லை என்றால் எனது கணவருக்கு வேறொருவர் மனைவியுடன் சேர்ந்து வாழ்ந்து அவருக்கு வாரிசு உள்ளதால் அவருடன் சேர்ந்து வாழ்வதா , வேண்டாமா என்று குழப்பமாக உள்ளது. எனது கணவர் வேறொரு பெண்ணை திருமணம் செய்து கொண்டதை குறித்து நான் புகார் ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை. இன்றைய தேதிவரையிலும் எனது கணவர் எனக்கும், எனது குழந்தைக்கும் பராமரிப்பு செலவுக்கு பணம் கொடுத்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் எனக்காகவோ, எனது குழந்தைக்காகவோ பராமரிப்பு செலவுக்கு பணம் கேட்டு ஜீவனாம்சம் வழக்கு ஏதும் தொடரவில்லை என்றால் சரிதான். எங்கள் ஊரில் பெரியோர்கள் வைத்து பேச்சு வார்த்தை நடத்தி சேர்ந்து வாழ கூறியும் சேர்ந்து வாழ தயாராக இல்லை என்றால் சரியல்ல. நான் எனது கணவரை ஒதுக்கி வைத்து, அவருடன் சேர்ந்து வாழாததால் எனது கணவர் மிகுந்த மன

வேதனைக்கு உள்ளாகி இருக்கிறார் என்றால் சரியல்ல. எனது கணவர் சம்பாதிக்கும் பணத்தின் மீது மட்டும் பிரியமாக இருக்கிறேன் என்றாலும், அவர் மீது எனக்கு பிரியம் இல்லை என்றாலும் சரியல்ல. எனக்கும், எனது கணவருக்கும் நடந்த திருமணத்தை ரத்து செய்தால் மட்டும் தான் அவருக்கு மனநிம்மதி கிடைக்கும் என்றால் சரியல்ல. ஆகவே இந்த விவாகரத்து மனு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/–P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.